# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1487/16 - 2007 මාර්තු 06 වැනි අඟහරුවාදා - 2007.03.06

1487/16 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 8/80

**1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் மைத்திரிபால சிரிசேன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியின் அங்கீகாரத்துடன், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள இடப்பரப்பை அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக "விசேட இடப்பரப்பாக" இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

மைத்திரிபால சிரிசேன,
கமத்தொழில் அபிவிருத்தி மற்றும்
கமநல சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2007, பெப்புருவரி 28.

**அட்டவணை**

விசேட இடப்பரப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :-

"மகாவலி" கங்கையின் கிளை நதிகளான அம்பன் கங்கை மற்றும் களுகங்கை ஆகிய ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி நீர்த்தேக்கங்களை நிர்மாணிக்க உத்தேசிக்கப்படும் இடப்பரப்புக்கள், அதற்கான பிற நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத் தேவையென அக்கிளை நதிகளின் மேலருவிப் பகுதியும் சார்புடைய நிர்மாணங்கள் அவசியமெனக் கருதப்படும் இடப்பரப்புகள். இவ்விடப்பரப்புகளின் எல்லைகள் கீழே தரப்பட்டுள்ளன :

கிழக்கு : அம்பன் கங்கைக்கு குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள எலஹெர குறுக்கு அணைக்கட்டின் மத்திய புள்ளியில் ஆரம்பமாகி கம எல இடதுகரை கிளை நதியின் நீருற்று அமைந்துள்ள இடம்வரை தென்கிழக்கு நோக்கி வரையப்பட்டுள்ள சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து கம எல இடது மற்றும் வலது கிளை நதிகள் சங்கமிக்கும் இடம்வரை கிழக்கு நோக்கி இடது கிளை நதி ஊடாக, அங்கிருந்து வட மத்திய மாகாண எல்லையைக் குறிக்கும் சாதாரண எல்லைக்கோட்டின் ஊடாகச் செல்லும் புள்ளிவரை தெற்கு நோக்கிய சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து கூறப்பட்ட நடைபாதை ஊடாக தென்கிழக்கு மற்றும் தெற்கு நோக்கிய மா ஓயாவின் மத்திய புள்ளியைச் சந்திக்கும் இடம் வரையும், அங்கிருந்து வடமேற்கு நோக்கி அமைந்துள்ள ஹத்தோட்டை கங்கை கால்வாய் முடியும் மத்திய புள்ளியைச் சந்திக்கும் வரையான மா ஓயாவீன் மத்திய புள்ளியினூடாக, அங்கிருந்து பொ.வே.ப. வீதியின் 28 ஆவது மைல் கனு சந்திக்கும் புள்ளிவரை ஹத்தோட்டை கங்கைக் கால்வாய் ஊடாகத் தெற்கு நோக்கியும், அங்கிருந்து பொ.வே.ப.. வீதியின் 31 ஆவது மைல் கல்லைச் சந்திக்கும் வரையான தெற்கு நோக்கிய 307 ஆவது

இலக்க பள்ளேகம கிராம சேவகர் பிரிவின் பள்ளேகம கிராமத்தின் கிழக்கு எல்லையூடாக, அங்கிருந்து கூறப்பட்ட கிராமத்தின் தென்கிழக்கு எல்லை சந்திக்கும் இடம் வரை ஹல்மினி ஓயாவுக்கு குறுக்காக அமைந்துள்ள நடைபாதை ஊடாக தெற்கு நோக்கியும், அங்கிருந்து கினிகம திரிகோணமிதிக இடம்வரை கிழக்கு நோக்கிய சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து கிழக்கு நோக்கி மதுமன கனிஷ்ட வித்தியாலயத்தின் வட எல்லை மற்றும் அந்த வித்தியாலயத்திற்கு வரும் நடைபாதை முடியும் புள்ளி சந்திக்கும் இடம்வரை அமைந்துள்ள சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து கூறப்பட்ட நடைபாதை ஊடாக நாகொல்ல-பள்ளேகம வீதியின் (பீ 312) 61 ஆவது கி. மீ. கல்லைச் சந்திக்கும் புள்ளிவரை தெற்கு நோக்கியும், அங்கிருந்து கிழக்கு நோக்கி கூறப்பட்ட பிரதான வீதி ஊடாக லக்கலை மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுகள் சந்திக்கும் புள்ளிவரையும், அங்கிருந்து கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் சந்திக்கும் எல்லை. ஊடாக மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களின் எல்லை மற்றும் லக்கலை வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுகள் சந்திக்கும் எல்லைவரையும் :

*தெற்கு* : கிழக்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கூறப்பட்ட மாவட்ட எல்லையினூடாக மேற்கு நோக்கி கூறப்பட்ட மாவட்ட எல்லை ரத்தோட்டை-லக்கலை பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லை சந்திக்கும் புள்ளிவரையிலும், அங்கிருந்து கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லையினூடாக மாத்தளை-பள்ளேகம பிரதான வீதியின் (பீ-274) 26 ஆவது கி. மீ. கல்லைச் சந்திக்கும் புள்ளிவரை வடக்கு நோக்கியும், அங்கிருந்து கூறப்பட்ட பிரதான வீதியூடாக ரத்தோட்டையால் திரும்பி கைக்காவெலயில் ஒபலங்கல வீதி சந்திக்கும் புள்ளிவரை மேற்கு நோக்கியும் ;

*மேற்கு* : தென் எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து வடக்கு நோக்கி கைக்காவெலயிலிருந்து ஒபலங்கல வீதி ஊடாக கம்மெதி ஓயா மற்றும் ஹிங்குருவத் ஓயா ஆகிய இடங்களைத் தாண்டி கும்பலொலுவ கிராம சேவகர் பிரிவின் ரத்தோட்டை ஓயாவுக்குக் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள தொங்கு பாலத்தின் மத்திய புள்ளிவரையும், அங்கிருந்து அம்பவகம திரிகோண மிதி இடம் வரை வடக்கு நோக்கிய சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து நாவுல எலஹெர பிரதான வீதியின் 30 ஆவது மைல் கல்லைச் சந்திக்கும் புள்ளிவரையும், அங்கிருந்து வடக்கு நோக்கிய சாதாரண புள்ளிக்கோட்டினூடாகவும் ;

*வடக்கு* : மேற்கு எல்லையின் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கெதரகல்பத்தான திரிகோண மிதி இடம்வரை கிழக்கு நோக்கிய சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து கிழக்கு நோக்கி புஸ்வெல்லகொல்ல திரிகோண மிதி இடம்வரை அமைந்துள்ள சாதாரண புள்ளிக்கோட்டினூடாக, அங்கிருந்து வட மத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளைப் பிரிக்கும் மாகாண எல்லையினூடாக தெற்கு நோக்கி கூறப்பட்ட எல்லை அம்பன் கங்கையின் மத்திய புள்ளி சந்திக்கும் இடம் வரையும், அங்கிருந்து அம்பன் கங்கையின் மத்திய புள்ளிக்கோட்டினூடாக ஆரம்ப கிழக்கு நோக்கிய புள்ளி வரையும்.